முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி ஐப்பசி மாதம் 4ம் திகதி முதல் ஐப்பசி மாதம் 11ம் தேதி வரை**

**அக்டோபர் 21ம் திகதி முதல் அக்டோபர் 28ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1. வேற்றுமையில் ஒற்றுமை நிறைந்த**
**வெற்றிமுகம் கொண்ட பரதம்**
**ஆற்றல்மிக்க ஞானியர்களின்**
**அருள்பலம் கொண்ட தமிழகம்**

**2. தமிழகம் இந்தியாவில் தன்னில்**
**தக்க விளம்பி துலை திங்களில்**
**நேமமுள சதுர் திகதி மேல் லாப திகதி வரை**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 4ம் நாள் 21.10.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 11ம் நாள் 28.10.2018, ஞாயிறு முடிய)**
**நடக்கும் எதிர்கால பலனாக வார நிகழ்வாக**

**3. நிகழ்வை சுப்பிரமணியர் யானும்**
**நிலமதனில் வார ஆசியாக உரைப்பேன்**
**புகழ்மிக்க தமிழக பூமி தன்னில்**
**பொருளாசை வழி பதவி மாந்தர்கள்**

**4. மாந்தர்களெல்லாம் ஊழல் செய்து**
**மக்களிடை நீதி அரசர்களிடை**
**சந்தேகமில்லா அகப்பட நேரும்**
**சாமார்த்தியமாக தீயவழி சேர்த்தவைகள் எல்லாம்**

**5. எல்லாம் சந்தைக்கு வர நேரும்**
**ஏமாற்றும் பிற தலைமைகளுக்கும்**
**அல்லல்பட எச்சரிக்கை ஆகவே**
**ஆறுமுகன் என் செயல் நடந்தேறும்**

**6. தேறவிடா மக்கள் நலங்களை**
**தேக்கி வைக்கும் மத்திய மாநில**
**அரச செயல்பாடுகளும் கூட**
**அம்பலமாகி மக்கள் பார்வைக்கு வரும்**

**7. வருகவே தலைமை நோக்கில்**
**வல்லமைபட நடக்கும் மாந்தர்கள்**
**தரும சிந்தைக்கு வந்து நன்கு**
**தமிழக இந்திய வளர்ச்சிக்கான**

**8. ஆனதொரு ஆக்க பூர்வ சேவைகள்**
**ஆற்றவே வரும் காலங்களில்**
**தானதரும சிந்தை மீறாமல்**
**தரும ஆட்சி தந்திட நேரும்**

9. நேருமையிலா செயல்கள் தொடர
நிலைகுலைந்து கீழ் மேல் என
வருமுலகில் எல்லா தலைமையும் மாறி
வடிவேலன் என் அருள் பெற்ற

10. அருள் பெற்ற மக்களே ஆளுமை
அதிகார நிலைக்கு வர நேரும்
ஆறுமுக அரங்கன் வடிவில் என் சேவை
அறமாக வளர்ந்து வருக

11. வருகவே அரங்கன் வாழும்
வல்லமையான பிரணவக் குடிலை
முருகா என வணங்கி வர
முழுமைபட தரும சேவையில் இணைந்து வர

12. வருபவர்களுக்கே இனி தலைமை
வாய்ப்பு ஆளுமைத் தொடர்பு
பெருகி இந்தியா தமிழகம்
பொருளாதார சகல வகையும் ஏற்றமுறும் வார ஆசி முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**இந்தியா தமிழகம் தன்னில் விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 4ம் நாள் 21.10.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 11ம் நாள் 28.10.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

மொழியாலும், மதங்களாலும், இனத்தாலும், பாகுபாடுகள், வேற்றுமைகள் இருந்தபோதும் அந்த வேற்றுமைகளிலும் ஒற்றுமையாய் இந்தியா எனும் ஒருமித்த கருத்து கொண்டு வெற்றிகளை காண்கின்ற பாரத தேசமே ஆற்றல் மிகுந்த ஞானியர்களின் அருள்பலம் கொண்டிட்ட தமிழகமே இந்த நாட்டினிலே விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 4ம் நாள் 21.10.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 11ம் நாள் 28.10.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

வல்லமைமிக்க ஞானிகளின் அருளாசி பெற்றிட்ட புகழ்மிக்க தமிழகத்தினில் பொருளாசை கொண்டு பதவியில் இருக்கின்றவர்கள் செய்யும் ஊழல் வெளிப்பட்டு மக்களுக்கு அவர்களது ஊழல் வெட்ட வெளிச்சமாக ஆகி நீதிபதிகளின் தீர்ப்புகளினால் அகப்பட நேரிடும். இதில் சந்தேகமே வேண்டாம், நீதி நீதிபதிகளால் நிலைநிறுத்தப்படும்.

பொருளாசையினால் தர்மத்திற்கு புறம்பான தீயவழிகளில் சென்று சேர்த்திட்ட பொருள்களெல்லாம் பொதுவிற்கு வந்துவிடும். அது தவிர மக்களையும், நீதியையும் ஏமாற்றி பிழைக்கும் பிற தலைமை பொறுப்பாளர்களுக்கும் தாம் செய்தது தவறுகள் என முருகப்பெருமான் எம்மால் சுட்டி காண்பிக்கப்படும். அவர்கள் தீய வழியில் சேர்த்த பொருள்களினால் துன்பப்பட நேரும். இது முருகப்பெருமான் எமது எச்சரிக்கையின் வெளிப்பாடாகும்.

முன்னேற்றங்களை தராததும், மக்களின் நலங்களை பாதிக்கின்ற வகையில் மத்திய மாநில அரசுகளால் செய்யப்படும், செயல்பாடுகள் எல்லாம் மக்கள் முன் அம்பலமாகி மக்களின் பார்வைக்கு வந்துவிடும்.

தலைமை பொறுப்பினை ஏற்று வல்லமைபட செயல்படுகின்றவர்கள் எல்லாம் தருமசிந்தையுடன் நடந்து தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் வளர்ச்சியளிக்கும் விதத்தில், தன்னலம் அற்று தொண்டுகளாய் செயல்படுவார்களேயானால் ஆக்கப்பூர்வமான சேவைகளை ஆற்றினால் வருங்காலங்களில் தானதருமங்களை செய்து தானதரும சிந்தையில் இருந்து அகலாமல் தொடர்ந்து செயல்பட்டால் இந்த நாடு நல்லாட்சி உடைய நாடாய் மாறி தரும ஆட்சி நாட்டினில் நடந்திடும்.

அவ்வாறு இல்லாமல் நேர்மையற்ற செயல்களினை தொடர்ந்து செய்திட்டால் அவர்களது நிலை, நிலைகுலைந்து கீழ்மட்ட தலைவர்கள் மேல்மட்ட தலைவர்கள் என எல்லா நிலையில் உள்ள தலைவர்களும் மாற்றமடைந்து முருகப்பெருமான் எமது அருள் பெற்ற மக்களெல்லாம் ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் வர நேரிடும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உருவில் முருகப்பெருமான் எனது சேவைகள் அறப்பணிகளாக வளர்ந்து வருகின்றது. ஆதலினால் ஆறுமுக அரங்கன் வாழும் வல்லமைமிக்க ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை நாடிச் சென்று முருகா, முருகா, முருகா என மனம் உருகி தொடர்ந்து வணங்கி வருவதுடன் முழுமையாக தருமத்தின் சேவையில் இணைந்து செயல்பட்டு வரவர, அவர்களது தருமசக்தி உயர்ந்து முருகப்பெருமானின் அருளாசிகளைப் பெற்று அவர்கள் தான் இனி வருங்காலங்களில் தலைமை வாய்ப்பினையும் பெற்று ஆளுமைத் தொடர்புகளையும் அடைந்து இந்தியாவும் தமிழகமும் சகலவிதமான முன்னேற்றங்களையும் அடைந்தும், பொருளாதாரம் சார்ந்த வகையிலும் பொருளாதாரத்திலும் முன்னேற்றங்களையும் அடைந்திடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–